தினமணி

16.06.2019

டிஎன்பிஎல் ஆலை சார்பில்

# இலவச தொழிற்கல்வி பயில தேர்வானோருக்கு கடிதம் அளிப்பு

**கரூர், ஜூன் 15:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலத்திட்டப் பணியின் கீழ் இலவசமாக தொழிற்பட்டயப் படிப்பு கல்வி பயில தேர்வான மாணவர்களுக்கு ஆவணக் கடிதம் வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் காகித நிறுவன வளாகத்தில் நடைபெற்றது.

ஆண்டுதோறும் டிஎன்பிஎல் ஆலை சார்பில் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 10-ம் வகுப்பு படித்து 60 சதவீதத்திற்கும் மேல் மதிப்பெண் பெறும் 5 மாணவர்களுக்கு இலவசமாக திருச்சி சேஷசாயி தொழில்நுட்பக்கல்லூரியில் காகிதப் பிரிவில் மூன்றரை ஆண்டு தொழிற்பட்டயப் படிப்பு பயில ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நிகழாண்டில் இத்திட்டத்தில் பயன்பெற ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தரவரிசைப் பட்டியலின் அடிப்படையில் மாணவர்கள் மு.கௌசிக், சு.கௌசிக், சே.மிதுலன், லோ.பூபதிராஜா, செ.முத்துக்குமார் ஆகிய 5 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் கல்வி பயில நிகழாண்டில் ரூ.8லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்வான மாணவர்களுக்கு ஆவணக் கடிதம் வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில், ஆலை நிர்வாகிகள், மாணவர்களின் பெற்றோர் ஆகியோர் திரளாகப் பங்கேற்றனர்.



இலவச தொழிற்பட்டயப் படிப்புக்கு தேர்வான மாணவர்களுடன் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன், முதன்மை பொது மேலாளர் (வணிகம் மற்றும் கருவியியல்) பாலசுப்ரமணியன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராஜூ உள்ளிட்டோர்.